Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.11/2020

**P.W**.1

| | |
|---|---|
| Name | : திரு..புகழேந்தி |
| Father/Husband Name | : திரு.வீராசாமி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

2, 4,5 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். 3 வது எதிரி ஆஜரில் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.05.2023

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது சட்ராசில் குடியிருந்து மருத்துவராக பணிசெய்து வருகிறேன்.

2) நான் சட்ராஸ், முதலியார் தெருவில் 30 வருட காலமாக மருத்துவராக பணிசெய்து வருகிறேன். என்னுடைய கிளினிக் இடம் சம்பந்தமாக எனக்கும், இடத்தின் உரிமையாளர் துரைசாமி என்பவருக்கும் பிரச்சனை இருந்து வந்தது. இது சம்பந்தமாக எங்களுக்கிடையே சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது. 19.5.2018 ம் தேதி காலை 9.30 மணியளவில் எனது உதவியாளர் நாசூரான் என்பவருக்கு எனது கிளினிக்கை இடிப்பதாக தகவல் வந்தது. உடனடியாக நானும், உதவியாளர் நாசூரானும் எனது கிளினிக்கிற்கு சென்றோம். அங்கு நாங்கள் சென்று பார்த்தபோது

துரைசாமி மற்றும் ஹரி ஆகியோர் கிளினிக்கிற்கு எதிரே நின்று கொண்டிருந்தார்கள். அவர்களது அறிவுறுத்தல்படி 3 பேர் கிளினிக்கின் மேற்கூரையை இடித்து கொண்டிருந்தார்கள். மேலும் இரண்டு பேர் கிளினிக்கின் மேற்கு பகுதியில் அரிவாள் போன்ற பயங்கர ஆயுதங்களை வைத்துக்கொண்டு இடித்துக்கொண்டிருந்தார்கள். இது குறித்து துரைசாமியிடம் கேட்டதற்கு பதில் எதுவும் சொல்லவில்லை. அதற்கு முன்பாக 16.5.2018ம் தேதி துரைசாமி கொடுத்த புகாரில் எங்களை திருக்கழுக்குன்றம் காவல் ஆய்வாளர் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார். மேலும் அந்த சமயத்தில் துரைசாமி என்னை தகாத வார்த்தைகளால் திட்டி தேவைப்பட்டால் வெட்டுவேன் என்றும் மிரட்டினார். நாகூரான் மேற்கண்ட சம்பவத்தை வீடியோ பதிவு செய்தார். எதிரி ஹரி நாகூரானை ஏன் வீடியோ எடுக்கிறாய் என்று சொல்லி அவரை கையால் கன்னத்தில் அடித்துவிட்டார். நாகூரானும், ஹரியை தாக்கினார். நான் அதை விலக்கிவிட்டேன். அப்போது எதிரிகளில் ஒருவர் அரிவாளின் மழுங்கிய பின்புறமாக நாகூரானை இடது கழுத்தில் அடித்தார். (மேற்கண்ட செயலில் ஈடுபட்ட எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 5 வது எதிரி மாரி என்று அடையாளம் காட்டுகிறார்) நாகூரானை காப்பாற்ற வேண்டி அந்த அரிவாளை பிடுங்கி நாகூரானிடம் கொடுத்தேன். பிறகு எதிரிகள் கலைந்து சென்றுவிட்டார்கள். இது குறித்து அன்றைய தினமே நான் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.சா.ஆ.1 புகார் மனுவை நான் தான் எழுதினேன். அதில் உள்ள விவரங்கள் தெரியும். நான் கிளினிக் நடத்தும் இடம் முதலில் மனோகரனுக்கு சொந்தமாக இருந்தது என்றால் சரிதான். அந்த கட்டிடம் 100 வருடம் பழமையானது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கட்டிடம் நான் கிளினிக் நடத்தும் கட்டிடம் தான். **(மேற்கண்ட புகைப்படம் பிரச்சனைக்குரிய கட்டிடத்தின் வயது சம்பந்தமாக மட்டுமே தாக்கல் செய்யப்படுகிறது என்று எதிரி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டதற்கு இணங்க அரசு தரப்பு ஆட்சேபணைக்குட்பட்டு மேற்கண்ட புகைப்படம் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அந்த கட்டிடம் முழுமையாக சேதம் அடைந்த நிலையில் உள்ளது என்றால் சரியல்ல. நான் வாடகை செலுத்தாத காரணத்தால் மனோகரன் என்னை இடத்தை காலி செய்ய சொல்லி இருந்தார் என்றால் சரியல்ல. நான் மனோகரன் மீது அ.வ.எண்.224/2014 தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் என்னை சட்டபூர்வமாக மட்டுமே வெளியேற்ற வேண்டும் என்று பரிகாரம் கோரியிருந்தேன். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன்பின் அந்த இடத்தை மனோகரன் 1வது எதிரி துரைசாமிக்கு விற்றுவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. துரைசாமி மீதும் மேற்சொன்ன பரிகாரத்திற்காகவே அ.வ.எண்.59/2017 சிவில் வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். தற்போது எனக்கும், இறந்துபோன துரைசாமிக்குமிடையே உரிமையாளர், வாடகைதாரர் உறவுமுறை இல்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன வழக்கில் நான்

வாடகை செலுத்த தயாராக உள்ளதாக இடைக்கால மனு எண்.137/2018 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதில் எங்களுக்கிடையே வாடகைதாரர், உரிமையாளர் உறவுமுறை இல்லாததால் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் தள்ளுபடி செய்யப்பட்டது. 1 வது எதிரி துரைசாமி இறந்துவிட்டார் என்றால் சரிதான். தற்போதும் அ.வ.எண்.59/2017 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இதே இடம் சம்பந்தமாக அ.வ.எண்.25/2022 வழக்கை துரைசாமியின் வாரிசுகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கொரோனா காலத்தில் என்னுடைய கிளினிக் ஆபத்தான நிலையில் உள்ளது என்று சீல் வைக்கப்பட்டது என்றால் சீல் வைக்கப்பட்டது, ஆனால் வேறு காரணங்களுக்காக. பிரச்சனைக்குரிய இடத்தில் கிளினிக்கே நடத்தாமல் வழக்குகளை போட்டு வீண் வியாஜ்ஜியம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 ல் சொல்லப்பட்டுள்ள 27.4.2018 மற்றும் 19.5.2018 ஆகிய தேதிகளில் நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 5 வது எதிரி அரிவாளின் பின்பகுதியால் தாக்கியதாக புகாரிலோ, போலிஸ் விசாரணையிலோ சொன்னேனா என்றால் புகாரில் சொல்லவில்லை. போலிசாரிடம் சொன்னேன். 1 வது எதிரியோ, 2 வது எதிரியோ, என்னை அவதூறாக பேசவோ, தாக்கவோ, மிரட்டவோ இல்லை என்றால் சரியல்ல. 2 வது எதிரி நாகூரானை வலது கன்னத்தில் அடித்ததாக போலிஸ் விசாரணையில் சொன்னேன். புகாரில் சொல்லவில்லை. 5 வது எதிரி மீது நான் சொன்ன குற்றசாட்டு யூகத்தின் அடிப்படையிலானது அல்ல. நான் கிளினிக் நடத்தும் இடத்தை அபகரிக்கும் நோக்கோடு 1 வது எதிரி மற்றும் அவரை சார்ந்தவர்கள் மீது பொய் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் சொன்ன தேதி, நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சொத்தின் உரிமையாளருக்கு வாடகை தராமல் அவரை அலைக்கழித்து துன்புறுத்தினேன் என்றால் சரியல்ல. நாங்கள் பதிவு செய்ததாக சொல்லும் வீடியோ ஆதாரத்தை போலிசாரிடம் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.11/2020

**P.W**.2

| | |
|---|---|
| Name | : திரு.நாகூரான் |
| Father/Husband Name | : திரு,கன்னியப்பன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

2, 4,5 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். 3 வது எதிரி ஆஜரில் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.05.2023

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது சட்ராசில் குடியிருந்து அ.சா.1 ன் உதவியாளராக பணிசெய்து வருகிறேன். அ.சா.1 மருத்துவராக பணிபுரிகிறார்.

2) கடந்த 19.5.2018 ம் தேதி காலை 9.00 மணியளவில் நான் வாயலூர் மருத்துவமனையில் இருந்தபோது சட்ராஸ் மருத்துவமனையை இடிப்பதாக தகவல் வந்தது. நானும், அ.சா.1 ம் கிளம்பி 9.30 மணியளவில் சட்ராஸ் மருத்துவமனைக்கு வந்தோம். அப்போது 2 வது எதிரி அங்கு நின்றிருந்தார். மற்ற ஆஜர் எதிரிகளும், சிலரும் மருத்துவமனையை இடித்துக்கொண்டிருந்தார்கள். மருத்துவர் சொன்னதின் பேரில் நான் அதை புகைப்படம் எடுத்தேன். உடனே 2 வது எதிரி ஹரி கையால் எனது

வலது கன்னத்தில் அடித்துவிட்டார். ஆஜரில் உள்ள 5வது எதிரி கத்தியின் பின்பகுதியால் எனது இடது கழுத்து பட்டையில் அடித்துவிட்டார். அ.சா.1 அந்த கத்தியை பிடுங்கி என்னிடம் கொடுத்துவிட்டார். இது குறித்து அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை,**

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பிரச்சனைக்குரியஇடத்தில் அரசாங்கம் சீல் வைத்துவிட்டதால் தற்போது அ.சா.1 அங்கு கிளினிக் நடத்தவில்லை என்றால் சரிதான். அந்த கட்டிடம் 100 வருடம் பழமையானது என்றால் தெரியாது. அது இடிந்து விழும் நிலையில் உள்ளது என்றால் மேற்கூரை இடியும் நிலையில் உள்ளது. அந்த இடத்திற்கு 1வது எதிரி துரைசாமி உரிமையாளர் என்ற விவரம் தெரியும். அந்த இடத்தை காலி செய்யக்கூடாது என்று அ.சா.1 அடிக்கடி புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்வார் என்றால் வழக்குகள் தாக்கல் செய்வார். நான் வீடியோ எடுத்ததை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் நினைவில்லை. 2வதுஎதிரி நான் சொன்னது போல் கன்னத்தில் அடிக்கவில்லை என்றால் சரியல்ல. 5வது எதிரி நான் சொன்னது போல் கத்தியால் தாக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 யிடம் பணிபுரிவதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.